02.11.2011

# பத்திரிக்கை செய்தி

அமரதீபம் **பெ. உத்திரவேலு** அவர்களுக்கு திருவுருவச்சிலை அமைப்பது தொடர்பான சிலை அமைப்புக்குழு கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் திரு. **ந. ரங்கசாமி** அவர்கள் தலைமையில் இன்று (02-11-2011) மதியம் 3-00 மணியளவில் வணிகவரித்துறை அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அமரதீபம் **பெ. உத்திரவேலு** அவர்களுக்கு சிலை அமைப்பது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய ஆயத்தப் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் அவர்கள் சிலை முழுவதுமாக வடிவமைக்கப்பட்டு தயாராக உள்ளது என்று கூறினார். அதனால் வருகின்ற டிசம்பர் மாதம் புதுச்சேரி மாநிலத்தில் உள்ள முக்கிய இடத்தில் சிலை நிறுவி, திறப்பு விழா நடத்துவது என முடிவு செய்யப்பட்டது. மேலும் சிலையின் அமைப்பை முதல்வர் தலைமையில் நேரில் சென்று பார்வையிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு சமூக நலம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. **பெ. ராஜவேலு,** மாவட்ட ஆட்சியர் **டாக்டர் தீபக்குமார்,** என்.ஆர்., காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. பாலன், முன்னாள் நகர மன்ற தலைவர் திரு. என்.எஸ்.ஜே. ஜெயபால், பொதுப்பணித்துறை தலைமை பொறியாளர் திரு. மனோகரன், செய்தி மற்றும் விளம்பரத்துறை இயக்குநர் திரு. செல்வராஜ் ஆகியோர் பங்கேற்றனர்.

**நல அமைச்சர் அலுவலகம்,**